பெரம்பலூர் மாவட்ட கருவூல அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகள்.
முன்னிலை: திருமதி.நா.பார்வதி, பி.காம்.,

ந.க.969/2019/அ2

நாள் : .03.2020

பொருள்: பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் - கருவூலக் கணக்குத்துறை - பெரம்பலூர் மாவட்ட கருவூல அலகு – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த சார்நிலைப்பணி தொகுதி – IV - 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ன் மூலம் இளநிலை உதவியாளர் (பிணையம் மற்றும் பிணையமற்றது)-ஆக பணியேற்பு செய்த **திருமதி.ம.திவ்யபாரதி** தெரிவு வரிசை எண்: **103** அவர்களது பணியினை வரன்முறைப்படுத்தி ஆணை வெளியிடப்படுவது – தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண்: 1149/PSD-H2/2019,நாள்:18.02.2019.
2. முதன்மை செயலர்/ஆணையர் கருவூலக் கணக்குத்துறை, சென்னை செமு.ந.க.7107/2019/C3, நாள் : 04.03.2019.
3. கருவூல அலுவலர், பெரம்பலூர் செமு.நக.969/2019/அ2, நாள் : 08.03.2019.
4. அரசு ஆணை நிலை எண்:246 நிதி (க.க.-II)த் துறை நாள் : 20.09.2011.
5. இணை இயக்குநர் (பணியாளர்), அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை ந.க.எண்.232519/V3/2019 நாள் : 25.06.2019.

********

**ஆணை :**

பார்வை (1)-ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த சார்நிலைப்பணி தொகுதி – IV - 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ன் மூலம் இளநிலை உதவியாளர் (பிணையம் மற்றும் பிணையமற்றது)-ஆக தெரிவு செய்யப்பட்டு, கருவூலக் கணக்குத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (2)-ல் காணும் முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் செயலமுறை ஆணையின் வாயிலாக பெரம்பலூர் மாவட்ட கருவூல அலகிற்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டதினைத் தொடர்ந்து, பார்வை (3)-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி **திருமதி.ம.திவ்யபாரதி,** தெரிவு வரிசை எண் **103** அவர்கள் இளநிலை உதவியாளராக மாவட்ட கருவூலம், பெரம்பலூரில் 08.03.2019 முற்பகல் பணியேற்பு செய்துள்ளார். தனியரின் கல்வித்தகுதி சான்றுகளின் உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்டது.

2. **திருமதி.ம.திவ்யபாரதி, இளநிலை உதவியாளர்** அவர்களது பணியினை தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி விதிகளின் பொது விதி 23(அ)ன் கீழ் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் தனியர் இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்துள்ள 08.03.2019 முற்பகல் முதல் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகின்றது.

1. இப்பணிவரன்முறையானது சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை ஆகியவற்றில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் ஒருங்கிணைந்த சார்நிலைப்பணி தொகுதி IV - 2015-16, 2016-17 மற்றும் 2017-18-ன் தெரிவு சம்மந்தமாக நிலுவையில் உள்ள வழக்குகளின் முடிவுகளுக்கு உட்பட்டது என தெரிவிக்கப்படுகிறது.

2. **திருமதி.ம.திவ்யபாரதி, இளநிலை உதவியாளர்** அவர்களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு கால தொடர்பணியில் இரண்டு ஆண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவ காலமாக வைக்கப்படுகிறார்.

3. தகுதிகாண் பருவ காலத்திற்குள் சார்நிலைப்பணி அலுவலர்களுக்கான கணக்குத்தேர்வு பாகம் 1, 2 மற்றும் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வு ஆகிய தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

4. பார்வை (4)-ல் காணும் அரசாணையின்படி அடிப்படை பயிற்சி நிறைவு செய்திருக்க வேண்டும்.

5. பணிவரன்முறைப்படுத்திய நாள் முதல் தகுதிகாண் பருவ காலம் தொடங்கப்படுகிறது என விளம்பப்படுகிறது.

கருவூல அலுவலர்,
பெரம்பலூர்.

பெறுநர்
திருமதி.ம.திவ்யபாரதி, இளநிலை உதவியாளர்,
மாவட்ட கருவூலம், பெரம்பலூர்.

நகல் : பணியாளரின் பணிப்பதிவேட்டிற்கு
நகல் : இருப்புக் கோப்பு / அலுவலக ஆணை கோப்பு

2119580